


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.10.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் சென்னை – செனாய் நகர் மற்றும் மதுரை – அண்ணா நகர் ஆகிய இடங்களில் 43.88 இலட்சம் ரூபாய் செலவிலான “அரண்” திருநங்கையர்களுக்கான இல்லத்தினை திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.10.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 43 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 திருக்கோயில்களில் 4 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு உதவி ஆணையர் அலுவலக கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 48 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் 7 திருக்கோயில்களில் 13 முடிவுற்ற பணிகள், ஒரு இணை ஆணையர் அலுவலகம், 13 ஆய்வர் அலுவலகங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாநில அளவில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டிற்கான

# ‘முதலமைச்சர் கோப்பை’ இ-ஸ்போர்ட்ஸ் விளையாட்டுப் போட்டி!

## வெற்றி பெற்றவர்களுக்கு – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சான்றிதழ் – பரிசுகள் வழங்கினார்!

**சென்னை, அக்.14-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.10.2025) ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் மாநில அளவில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை இ-ஸ்போர்ட்ஸ் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து, மொத்தம் 9,75,000 க்கான பரிசுத் தொகை காசோலை, சான்றிதழ் மற்றும் வீரன் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டினார்.**




தமிழ்நாட்டின் ஒலிம்பிக்ஸ் என அழைக்கப்படும் முதலமைச்சர் கோப்பை 2025-ஆம் ஆண்டிற்கான போட்டியையொட்டி மாவட்ட அளவிலான போட்டிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 25.8.2025 அன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

முதலைமைச்சர் கோப்பை 2025 போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகைக்காக மட்டும் 37.00 கோடி ரூபாய் உள்பட மொத்தம் 83.37 கோடி ரூபாயை முதலமைச்சர் கோப்பை 2025 விளையாட்டு போட்டிகளுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டியில் மாவட்ட அளவிலான போட்டிகளில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர், பொதுப் பிரிவினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசுப் பணியாளர்கள் என 5 பிரிவுகளில் 16,28,338 பேர் இணையதளத்தின் மூலம் முன்பதிவு செய்து, 37 வகையான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றனர். மாவட்ட மற்றும் மண்டல அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 30,136 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கடந்த 2.10.2025 முதல் தொடங்கி 14.10.2025 வரை சென்னை, கோயம்பத்தூர், திருச்சி, மதுரை மற்றும் செங்கல்பட்டு ஆகிய 13 நகரங்களில் நடைபெற்று வரும் போட்டிகளில் பங்கேற்று வருகின்றனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு அரசு, முதலமைச்சர் கோப்பை 2024 விளையாட்டு போட்டிகளில் இ-ஸ்போர்ட்ஸ் விளையாட்டை காட்சிப் பிரிவாக (Demonstration Sport) அறிமுகப்படுத்தியது. இந்நிகழ்வு மிகுந்த வெற்றியைப் பெற்று, மாநில மற்றும் தேசிய அளவிலான அச்சு மற்றும் சமூக ஊடகங்களில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இத்தகைய வெற்றியை அங்கீகரிக்கும் வகையில் GEM Awards, தமிழ்நாடு ‘Best State Contribution to e-Sports’ என்ற விருதினைப் பெற்றது.

இந்நிலையில் ஆசிய ஒலிம்பிக் கவுன்சில் (Olympic Council of Asia), வரவிருக்கும் 2026-ல் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், மொத்தம் 11 இ-ஸ்போர்ட்ஸ் பிரிவுகள் இடம்பெறுவதை உறுதி செய்துள்ளது. மேலும், சர்வதேச ஒலிம்பிக் குழு (International Olympic Committee - IOC) முதலாவது ஒலிம்பிக் இ-ஸ்போர்ட்ஸ் விளையாட்டுகளை 2027ஆம் ஆண்டு சவுதி அரேபியாவின் ரியாத்தில் நடத்த தீர்மானித்துள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கோப்பை இ-ஸ்போர்ட்ஸ் விளையாட்டுப் பிரிவில் ஆன்லைன் தகுதித் சுற்றுக்காக ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பதிவு செய்தனர். அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 250-க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்க வளாகத்தில் நடைபெற்ற 6 விளையாட்டுகளில் இறுதிச் சுற்றில் பங்கேற்றனர். மாநில அளவில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை - 2025 இ-ஸ்போர்ட்ஸ் விளையாட்டு போட்டிகளில் 3 விளையாட்டு பிரிவுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு நேற்று முன்தினம் (12.10.2025) தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதக்கம் அணிவித்து, மொத்தம் 9,75,000க்கான பரிசுத் தொகை காசோலைகள், சான்றிதழ் மற்றும் வீரன் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டினார்.

முன்னதாக சென்னை நேரு விளையாட்டு அரங்கில் தமிழ்நாட்டில் முதல்முறையாக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பயிற்சி மேற்கொள்ளும் வகையில் 14.72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அதிநவீன தானியங்கி கூடைப் பந்து பயிற்சி இயந்திரம் மற்றும் 14.75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன தானியங்கி வாலிபால் பயிற்சி இயந்திரங்களை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மாவட்ட வருவாய் அலுவலர் வே. மணிகண்டன், பொதுமேலாளர் திருமதி. எல். சுஜாதா, ஸ்கை இ-ஸ்போர்ட்ஸ் மற்றும் தமிழ்நாடு இ-ஸ்போர்ட்ஸ் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### மருந்து தயாரிக்கும்

# ஸ்ரீசன் பார்மசியூட்டிகள் நிறுவன உரிமம் முழுமையாக ரத்து!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

**சென்னை, அக்.14-**

**ஸ்ரீசன் பார்மசியூட்டிகள் நிறுவனத்தின் மருந்து தயாரிக்கும் உரிமங்கள் முழுவதுமாக ரத்து செய்யப்பட்டு அந்நிறுவனம் மூடப்பட்டுள்ளது**

கடந்த அக்டோபர் மாதம் 1 ஆம் தேதி அன்று (1.10.2025) பிற்பகல் சுமார் 3.30 மணியளவில், மத்தியப் பிரதேச மாநில மருந்து கட்டுப்பாட்டு துறையிடம் இருந்து, தமிழ்நாடு மருந்து கட்டுப்பாட்டு துறைக்கு ஒரு கடிதம் பெறப்பட்டது.

அக்கடிதத்தில், 4.9.2025 முதல் மத்தியபிரதேச மாநிலம் சிந்த்வாரா மாவட்டத்தில் ஏற்பட்ட குழந்தைகள் மரணத்துக்கு தொடர்புடையதாக கருதப்படும் மருந்து, கோல்ட்ரிஃப் சிரப் (பாராசிட்டமால், ஃபீனைல்ஃப்ரைன் ஹைட்ரோகுளோரைடு, குளோரிபெனிரமைன் மெலேட் சிரப்), குறித்த விவரம் பெறப்பட்டது.

இது தொடர்பாக, அன்றைய தினமே (01-10-2025) சுமார் 4.00 மணியளவில், துணை மருந்து கட்டுப்பாடு இயக்குனரின் உத்தரவின் பேரில், முதுநிலை மருந்துகள் ஆய்வாளர் (SENIOR DRUGS INSPECTOR) தலைமையிலான குழு, M/S. ஸ்ரீசன் பார்மசியூட்டிகள் நிறுவனத்தில் ஆய்வு மேற்கொண்டனர்.

மேலும் 01-10-2025 அன்றே தமிழ்நாடு முழுவதும் சந்தேகத்திற்குரிய கோல்ட்ரிஃப் சிரப் (COLDRIF SYRUP) விற்பனை மாநிலம் முழுவதும் தடை செய்யப்பட்டது (SALES BANNED).

அக்குழு (01-10-2025 TO 02-10-2025) மேற்கொண்ட தொடர் ஆய்வில் மருந்துகள் விதிகள், 1945-இன் கீழ் விதிமீறல்கள் கண்டறியப்பட்டு, சர்ச்சைக்குரிய மருந்தான கோல்ட்ரிஃப் சிரப் (COLDRIF SYRUP) BATCH NO: SR-13 உள்ளிட்ட 5 மருந்துகள் அவசர பகுப்பாய்வுக்காக எடுக்கப்பட்டு அரசு மருந்துகள் பகுப்பாய்வு கூடம், சென்னைக்கு அனுப்பப்பட்டது. பகுப்பாய்வின் முடிவில் டைஎதிலீன் கிளைகால் (DIETHYLENE GLYCOL, DEG) என்ற உயிர்க்கொல்லி நச்சு வேதிப்பொருள், கோல்ட்ரிஃப் சிரப்பில் (COLDRIF SYRUP) 48.6 சதவீதம் (48.6% W/V) இருப்பதாக 02-10-2025 அன்று கண்டறியப்பட்டது.

மேலும், மேற்கூறிய நிறுவனத்திலிருந்து, ஒடிசா மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கு கோல்ட்ரிப் மருந்து விநியோகிக்கப்பட்ட தகவல் கிடைக்கப்பட்ட விபரம் பெறப்பட்டவுடன், சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கும் இதுதொடர்பான தகவல்கள், 2-10-2025 அன்றே மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது.

இந்த சளி மருந்தில் டைஎதிலீன் கிளைகால் (DIETHYLENE GLYCOL, DEG) என்ற நச்சு வேதிப்பொருள் கண்டறியப்பட்டதால், 03-10-2025 அன்றே, ஸ்ரீசன் பார்மசியூட்டிகள், நிறுவனத்திற்கு பொதுநலன் கருதி மருந்து உற்பத்தியை உடனடியாக நிறுத்த உத்தரவு (STOP PRODUCTION ORDER) பிறப்பிக்கப்பட்டு அந்நிறுவனம் அதிகாரிகளால் உடனடியாக மூடப்பட்டது. மேலும் தொடர் நடவடிக்கையாக ஸ்ரீசன் பார்மசியூட்டிகள் நிறுவனத்தின் மருந்து உரிமங்கள் முழுவதுமாக ஏன் ரத்து செய்யப்படக்கூடாது (CANCELLATION) என விளக்கம் கேட்டு 03.10.2025 அன்றே குறிப்பாணையும் அனுப்பப்பட்டுள்ளது.

மத்திய பிரதேசத்தில் முதல் உயிர் இழப்பு 04.09.2025 அன்று ஏற்பட்ட நிலையில் தமிழ்நாடு மருந்து கட்டுப்பாட்டுத் துறைக்கு 01.10.2025 அன்றே தகவல் அனுப்பப்பட்டது. இவ்வாறு, தகவல் பெறப்பட்ட 48 மணிநேரத்தில் தமிழ்நாடு அரசின் மருந்து கட்டுப்பாட்டு துறையால் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அம்மருந்து நிறுவனத்தில் புலனாய்வு மேற்கொண்டு, சர்ச்சைக்குரிய மருந்தை ஆய்வுக்குட்படுத்தி, தயாரிப்பு நிறு வனத்தில் உள்ள மருந்துகளையும், தமிழ்நாட்டில் விற்பனையில் உள்ள மருந்துகளையும் தடைச்செய்து, அம்மருந்தில் விஷத்தன்மையுள்ள வேதிப்பொருள் டைதிலீன் கிளைகால் (DEG) இருப்பதை கண்டறிந்து, அந்நிறுவனத்தின் மருந்து உற்பத்தியை உடனடியாக நிறுத்தி மூடப்பட்டு, மேல்நடவடிக்கையாக அந்நிறுவனத்தின் உரிமங்களை முழுமையாக ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டும், இம்மருந்து விநியோகம் செய்யப்பட்ட மாநிலங்களுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்த தகவல்கள் அனைத்தும் மத்தியப் பிரதேச மருந்து கட்டுப்பாட்டு துறைக்கும் உடனடியாக, 03.10.2025 அன்று மின்னஞ்சல் மூலமாக மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது. மேலும், 03.10.2025 அன்றே DRUGS CONTROLLER GENERAL OF INDIA (DCGI) மற்றும் DEPUTY DRUG CONTROLLER, SOUTH ZONE, CHENNAI அவர்களுக்கும் விரிவான அறிக்கை மற்றும் அந்நிறுவனத்தில் உற்பத்தி நிறுத்திய ஆணை அனுப்பப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக COLDRIF SYRUP என்ற மருந்தின் ஆய்வு அறிக்கையில் கண்டறியப்பட்ட DIETHYLENE GLYCOL 48.6 % நச்சு பொருள் இருந்ததன் காரணமாக அந்த மருந்து நிறுவனத்தின் உரிமையாளர் மீது குற்ற நடவடிக்கை (CRIMINAL PROCEEDINGS) எடுத்து அந்நிறுவன உரிமையாளர் தலைமறைவானதால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்காக குற்ற குறிப்பாணை (SHOW CAUSE MEMO)

07.10.2025 அன்று மருந்து ஆய்வாளர் மூலம் அந்நிறுவனத்தின் வெளிபுறமும், உரிமையாளரின் வீட்டின் கதவில் ஒட்டப்பட்டது.

மேலும், அந்த நிறுவனத்தின் உரிமையாளர் மீது குற்றவியல் (CRIMINAL) நடவடிக்கை மேற்கொள்ள C-2 சுங்குவார்சத்திரம் காவல் நிலையத்தில் மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை மூலம் புகார் கொடுக்கப்பட்டது.

தமிழ்நாடு காவல் துறையின் உதவியுடன் மத்திய பிரதேச சிறப்பு புலனாய்வு பிரிவு (SPECIAL INVESTIGATION TEAM), 09-10-2025 அன்று அதிகாலை சென்னை அசோக் நகர் பகுதியில் நிறுவனத்தின் உரிமையாளர் ரங்கநாதன், (வயது 75) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் அந்நிறுவனத்தில் 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் ஆய்வு முறையாக மேற்கொள்ளப்பட்டு இந்நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், கடந்த ஆண்டில், உரிய ஆய்வு மேற்கொள்ளாத காஞ்சிபுரம் முதுநிலை மருந்துகள் ஆய்வாளர் இருவர் பணியிடை நீக்கம் (SUSPENSION) செய்யப்பட்டு, துறை ரீதியான மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நேற்று (13-10-2025), ஸ்ரீசன் பார்மசியூட்டிகள் நிறுவனத்தின் மருந்து தயாரிக்கும் உரிமங்கள் முழுவதுமாக ரத்து செய்யப்பட்டு அந்நிறுவனம் மூடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள இதர மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மீது விரிவான ஆய்வு மேற்கொள்ள ஆணைகள் வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் மாநிலம் முழுவதும் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர் மேற்கு ஒன்றியம் வட சிறுவலூர் ஊராட்சியில் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் நாகேந்திரன் தலைமையில் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், டாக்டர் சேகர், செஞ்சி சிவா, சொக்கலிங்கம், ராஜாராமன், நாகேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளியில் திறந்து வைத்தார்!

# திண்டிவனம் சிப்காட் உணவுப் பூங்கா தொடக்க விழா!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. – ரவிக்குமார் எம்.பி. பங்கேற்பு!

திண்டிவனம், அக். 14-

திண்டிவனம் சிப்காட் உணவு பூங்காவில் 39.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட உட் கட்டமைப்புப் பணிகளை காணொளி காட்சி வாயிலாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்ததையடுத்து சிப்காட் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., ரவிக்குமார் எம்.பி., விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் ஆகியோர் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

படித்த இளைஞர்களுக்கு பல்வேறு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு முன்னெடுப்பு களை எடுத்து வருகிறார்.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதி மயிலம் ஒன்றியம் பெலாக்குப்பம் ஊராட்சியில் உள்ள சிப்காட்டில் தொழில் ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் உணவு பூங்காவில் 39.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை வசதிகள், குடிநீர் வடிகால் வசதிகள், மேல்நிலை குடிநீர் தொட்டி, கீழ்நிலை குடிநீர் தொட்டி என பல்வேறு உட் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திண்டிவனம் சிப்காட் உணவு பூங்காவில் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார் .

இதை அடுத்து சிப்காட் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் ஆகியோர் பங்கேற்று பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

நிகழ்ச்சியில் மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார், மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மயிலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் மணிமாறன், மேல்மலையனூர் ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், திண்டிவனம் நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன், சிப்காட் தனித்துணை ஆட்சியர் விஜயா, சிப்காட் திட்ட அலுவலர் செல்வராணி, ஒன்றிய கவுன்சிலர்கள் சாந்தகுமார், உமா ஞானசேகர், ராஜ் பரத், ஊராட்சி மன்றத் தலைவர்கள் பெலாக்குப்பம் பூங்கா பாக்யராஜ், கொள்ளார் புண்ணிய மூர்த்தி, முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் அசோகன், முன்னாள் நகரச் செயலாளர் கபிலன், சிப்காட் உதவி பொறியாளர் கந்தசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



விளாத்திகுளம் பேரூராட்சிக்குட்பட்ட துலுக்கன்குளம் கண்மாயைச் சுற்றிலும் விளாத்திகுளம் பேரூராட்சி நிர்வாகம், விளாத்திகுளம் சாந்தி மருத்துவமனை, மரங்கள் மக்கள் இயக்கம் இணைந்து 50க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடும் பணியினை சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் சூர்யா அய்யன்ராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.